## கல்வாரி அன்பை

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே
கர்த்தர் உம் பாடுகள்
இப்போதும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

கெத்சமனே பூங்காவில்
கதறி அழும் ஓசை
எத்திசை அன்பு தொனிக்கின்றதே
எந்தன் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே

என்னையும் உம்மைப்போல் மாற்றிடுவே
உம் ஜீவன் தந்தீரன்றோ
என்தலை தரைமட்டும் தாழ்த்துகின்றேன்
தந்துவிட்டேன் அன்பு கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும்